இந்நூலில் உள்ள பாடல்கள் முதலில் சுவாமிகள் இயற்றியவாறும் பின்பு சித்தாந்த செல்வர், அருநூற்புலமை ஆன்றோர் பேராசிரியர் டாக்டர் ப. இராமன், அவர்களின் வழிக்காட்டுதல் பெயரில் இப் பாடல் என்னைப் போல் எளியவர் படிப்பதற்கு ஏற்றவாறு பிரித்தும் அந்த பாடல்களுக்கு விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரித்து கொடுப்பது எளிய முறையில் கற்றுக் கொள்ளுவதற்க்கு மட்டும் தான் பயன்படுத்தப்பட வேண்டும்.

# *ஏமவிலேகர்*

## *கலிவிருத்தம்*

ஏமவி லேகரை யேவல்கொள் வேலோய்
தேமலர் நின்னடி சிந்தைசெய் வேற்கு
மாமருண் முற்றிலு மாறிடா தென்னென்
றேமுறு முன்னைவி னாவிலென் சொல்வாய்.

*ஏம இலேகரை ஏவல்கொள் வேலோய்*
*தேமலர் நின்அடி சிந்தை செய்வேற்கு*
*மாமருள் முற்றிலும் மாறிடாது என் என்று*
*ஏம்உறும் உன்னை வினாவில் என் சொல்வாய்.* 1.

இனிய வானோரை ஏவல் கொள்ளும் வேல் இறைவனே! தென் பொருந்திய மலர்போலும் உன் திருவடியை நினப்போர்க்குப் பெரிய அறிவு மயக்கம் முற்றிலும் மாறாமல் இருப்பது ஏன் என்று மகிழ்ச்சி கொள்ளும் உன்னைக் கேட்டால் என்ன மறுமொழி கூறுவாய்?

வையமு தித்துண்ம ருண்டிதன் முன்னீ
செய்தவி னைத்தொடர் தீர்ந்திடு காறும்
மையிருள் போழருண் மார்க்கமு றாதென்
றையப திற்புகல் வாய்கொலோ வன்றே.

*வையம் உதித்து உள்மருண்டு இதன் முன் நீ*
*செய்த வினைத்தொடர் தீர்ந்திடு காறும்*
*மை இருள் போழ் அருள்மார்க்கம் உறாது என்று*
*ஐயபதில் புகல்வாய்கொல்லூ அன்றே.* 2.

இப்பூவுலகில் பிறந்து மனம் மயங்கி, இப்பிறப்பிற்கு முன்னே செய்த வினைத் தொடர்ச்சி ஒழியும்வரை ஆணவம் எனும் காரிருளைப் பிளக்கும் அருள் நெறி உண்டாகாது என்ற தலைவனாகிய நீ பதில் கூறுவாயோ?

கலமணி வேந்தர்செய் கட்டளை தன்னை
நிலமிசை மாற்றுநி யாயம தேய்ப்ப
உலகெலா மாளுன துத்தர மாற்றம்
இசைகொலோ நின்னரு ணீதியி லெந்தாய்.

*கலம் அணி வேந்தர் செய் கட்டளை தன்னை*
*நிலம் மிசை மாற்று நியாயம் அது ஏய்ப்ப*
*உலகுஎலாம் ஆள் உனது உத்தர மாற்றம்*
*இலை கொல்லூ நின் அருள் நீதியில் எந்தாய்.* 3.

அணிகலன்கள் அணியும் அரசர் இடும் கட்டளையை இவ்வுலகில் மாற்றுகின்ற நீதியைப் போல் உலகம்? எல்லாம் ஆள்கின்ற உனது கட்டளை மாற்றம் இல்லையோ? உன் அருள்நீதியில் எம் தந்தையே!

அப்படி மாற்றமு முண்டது கோடற்
கிப்பொழு தன்பவு னெஞ்சிலை யென்று
செப்பிடி னீயுனை நம்பிய சேய்நான்

எப்படி யுய்குவ லென்செய்வ லெந்தாய்.

*அப்படி மாற்றமும் உண்டு அது கோடற்கு*
*இப்பொழுது அன்ப உன் நெஞ்சுஇலை என்று*
*செப்பிடில் நீ உனை நம்பிய சேய் நான்*
*எப்படி உய்குவல் என் செய்வல் எந்தாய்.* 4.

அன்பனே! அத்தகைய மாற்றமும் உண்டு. அதனைக் கொள்வதற்கு இப்பொழுது உன் மனம் தகுதி பெறவில்லை என்று நீ கூறினால், உன்னை நம்பியிருக்கும் குழந்தையாகிய நான் எப்படி உய்வேன். எம் தந்தையே என்ன செய்வேன்??

ஏர்த்தமிழாலுனை யேபுகழ் வோரைப்
பார்த்தரு டேவப ரஞ்சுட ரோதிப்
பேர்த்திரு வாளன டைந்தவொர் பேற்றிற்
சேர்த்தரு ளாயெனை யுஞ்சிவ சேயே.

*எர்த் தமிழால் உனையே புகழ்வோரைப்*
*பார்த்து அருள் தேவ பரஞ்சுடர் ஓதிப்*
*பேர்த் திருவாளன் அடைந்த ஓர் பேற்றில்*
*சேர்த்து அருளாய் எனையும் சிவ சேயே.* 5.

அழகிய தமிழ்ப் பாக்களால் உன்னையே புகழ்வோரைத் தேர்ந்தெடுத்து அருள்புரியும் கடவுளே! பரஞ்சோதி மலைப்பெயர் கொண்டுள்ள திருவாளன் என்னும் அருணகிரிநாதர் அடைந்த ஒப்பற்ற வீடு பேற்றில் சிவபெருமானின் புதல்வனே! என்னையும் சேர்த்து அருள்புரிவாயாக.

## கட்டளைக்கலித்துறை

காலமே யாவையுந் தந்திடுங் காக்குங் களையுமந்தக்
காலமோ காளையங் கந்தவேள் கையகப் பட்டதென்றால்
ஆலமுண் டோனுமைக் கோதுண்மை மாற்றமுன் டாகலினுன்
பாலனா மென்னையு மூழ்கட்டு மோவெம் பராபரமே.

*காலமே யாவையும் தந்திடும் காக்கும் களையும் அந்தக்*
*காலமோ காளைஅம் கந்தவேள் கைஅகப் பட்டது என்றால்*
*ஆலம் உண்டோன் உமைக்குஓது உண்மை மாற்றம் உண்டு ஆகலின் உன்*
*பாலன் ஆம் என்னையும் ஊழ் கட்டுமோ எம் பராபரமே.* 6.

காலமோ எல்லாவற்றையும் தோற்றுவிக்கும், காக்கும், அழிக்கும்; அந்தக் காலமோ கட்டிளங் காளையான அழகிய கந்தவேள் கையில் உள்ளது. ஆகலின் ஆலகால விடத்தை உண்ட சிவபெருமான் உமை அம்மைக்குக் கூறிய மெய்யுரை உண்டாகலின், எம்முடைய மேலான கடவுளே! உன் பாலன் ஆகிய என்னையும் ஊழ்வினை கட்டுமோ? கட்டாதல்லவா?